[9th August 1963

திரு. ர. ஜீவரத்னம் : கனம் தலைவர் அவர்களே, வேலூரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் கூட்டுறவு நூற்பு ஆலைக்குத் தனி நபர்கள் கூட்டுறவுத் துறையிலே எடுத்துக் கொள்ளவேண்டிய பங்குத் தொகைக்கு மேல் அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Information is not a question.

தாம்பரம் சானடோரியம் ஸ்டேஷன்

** 68 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :* கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பீச்சிலிருந்து தாம்பரம் போகும் எலக்ட்ரிக் டிரெயின்களை தாம்பரம் சானடோரியம் ஸ்டேஷனில் நிற்க ஏற்பாடு செய்யும்படி மத்திய சர்க்காருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH : The Madras Government have not made any such representation to the Government of India.

ஆட்சிமொழி பற்றி பத்திரிகை நிருபர் மாநாடு

** 69 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :* கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்திய ஆட்சிமொழி மசோதாவைப்பற்றி விளக்குவதற்காக ஏப்ரல் திங்களில் கல்வியமைச்சர் விசேஷ பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை சென்னைக் கோட்டையில் நடத்தியது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விசேஷப் பத்திரிகை நிருபர் கூட்டம் எதுவும் கூட்டப்படவில்லை. பத்திரிகை நிருபர்கள் எனது அறையில் என்னைச் சந்தித்தபோது ஆட்சி மொழி மசோதா மீது என் அபிப்பிராயத்தை வெளியிட்டேன்.

No special Press Conference was held. I expressed my views on the Official Language Bill when the representatives of the Press met me in my chamber.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த ஆட்சி மொழி மசோதா பற்றித் தமிழக காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களும் மற்ற மாநில உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், சென்னை அரசு இந்த மசோதாவை ஆதரிப்பதாகச் சொல்லும்படி சென்னை அரசுக்கு மத்திய அரசிலிருந்து நமது நிதி அமைச்சர் அவர்களுக்குத் தனியாக ஏதாவது தாக்கீது வந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒன்றும் தாக்கீது வரவில்லை. அப்படித் தாக்கீது வந்தாலும் அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. அப்படி ஒன்றும் தாக்கீது கொடுக்கமாட்டார்கள். அதற்கு முன்பு நான் டெல்லியில் இருந்த

9th August 1963]

பொழுது, பார்லிமெண்டு மன்றத்தின் உறுப்பினர்கள் சிலரிடத்தில் கூட இதைப்பற்றி பேசிக் கொண்டிருந்தேன். என்னுடைய அபிப் பிராயத்தை வந்தவர்களிடத்தில் தெரிவித்தேன்.

திரு. மு. கருணாநிதி: டெல்லியிலிருந்து எதுவும் தாக்கீது வராமலே, மற்ற மாநிலங்களை முந்திக் கொண்டு அவசர, அவசிய மாகத் தன்னுடைய அபிப்பிராயத்தை அமைச்சர் அவர்கள் அங்கு தெரிவிக்கவேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அபிப்பிராயம் கேட்டார்கள், சொன்னேன். நாட்டைப் பிரிப்பதற்குக் கூட பேச்சுரிமை வேண்டும், கருத்துரிமை வேண்டும் என்று கேட்கக்கூடியவர்கள் அபிப்பிராயம் தெரிவிப்பதைத் தவறு என்று சொல்லக் கூடாது. ஆனால், அதைப்பற்றி கனம் அங்கத்தினர்களும், கனம் எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களும் விமர்சனம் செய்து கொள்ளலாம். அப்படித்தான் இந்தக் கேள்வியினால் அவர்கள் செய்வது.

திரு. கே. ஏ. மதியழகன்: அமைச்சர் அவர்கள் அபிப்பிராயம் தெரிவிப்பது தவறு என்பது அல்ல. ஆனால் ஆட்சி மொழி சம்பந்த மாக மற்ற நேரங்களிலெல்லாம் எல்லாக் கட்சிகளையும் கலந்து கொண்டு, ஆட்சி மொழிக் கமிஷனிடம் கூட நாம் இந்த மாநிலத் தின் சார்பிலே ஒரே அபிப்பிராயமாகச் சொன்னோம். அப்படி யிருக்கும்பொழுது இதற்கு ஏன் அவசியம் ஏற்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவசியம் ஒன்றுமில்லை. எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து கொண்டு, கட்சி உறுப் பினர்களையும் கலந்து கொண்டு முன்பு இந்த மன்றத்தில் ஒரு அபிப் பிராயம் திரட்டப்பட்டது. நேற்று அதே கருத்தைத்தான் நான் தெரிவித்திருக்கிறேன். அந்த முடிவுக்கேற்றவாறு இந்த மசோதா அமைந்திருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த அபிப்பிராயத்தைத்தான் நேற்று இந்த மன்றத்தில் தெரிவித்திருக் கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. லால்பக தூர் சாஸ்திரி அவர்கள் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் என்பது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி பார்லிமெண்டில் உறுப்பினர் யாராவது கனம் லால்பகதூர் சாஸ்திரி அவர்களைக் கேட்கலாம்.

பால்பேரிங் தொழிற்சாலை

*** 70 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அரக்கோணத்தில் பால்பேரிங் தொழிற்சாலை எப்போது நிறுவப்படும்?

(இ) தனியார் துறையிலா, சர்க்கார் துறையிலா?